1993 டிசம்பர் 31]

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும். சென்னை நகரிலே அமைக்க வேண்டுமென்றால் காவல் துறை ஆணையாளர் அவர்களும் உரிமை வழங்குகின்ற அதிகாரிகள் ஆவார்கள். வீடியோ தியேட்டர் அமைப்பதற்கு முதலில் தடையில்லாச் சான்றிதழ் பெறுதல் வேண்டும். உரிமம் வழங்கும் அதிகாரிகளால் வழங்கப்படும் என். ஓ. சி. ஓராண்டு காலத்திற்கு செல்லத் தக்கதாக இருக்கும். அது மேலும் ஓராண்டு காலத்திற்கு நீடிக்கப்பட வேண்டும் என்றால் விதிகளில் அதற்கான வகை செய்யப்பட்டிருக்கிறது. வீடியோ தியேட்டர்கள் அமைக்கப்படும் இடத்திற்கும். நிரந்தரம் அல்லது பகுதி நிரந்தர திரையரங்கம் அமைந்திருக்கும் இடத்திற்குமான இடைவெளி தூரம் 2 கிலோ மீட்டருக்குக் குறையாமல் இருக்க வேண்டும். வீடியோ தியேட்டருக்கும், உலவும் திரையரங்கிற்கும் இடையே உள்ள தூரம் 1.609 கிலோ மீட்டருக்குக் குறையாமல் இருக்கவேண்டும். இரண்டு வீடியோ தியேட்டர்களுக்கான இடைவெளி தூரம் 2 கிலோ மீட்டருக்கு குறையாமல் இருக்கவேண்டும். வீடியோ தியேட்டருக்கான வரைப்படம் ஒப்புதல் பெற்றதற்கு பிறகு. கட்டிடம் கட்டப்பட்டு முடிக்கப்பட்டவுடன் கட்டிட உறுதிச் சான்றிதழ் மற்றும் மின்சாரத் துறை சான்றிதழ்கள் பெறப்படவேண்டும். வீடியோ தியேட்டர்கள் இயங்குவதற்கான 'ஜி' படிவம் ஒன்றும் வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 115 திரு. கோ. காளன், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.

115–

அம்பத்தூர் இ.எஸ்.ஐ. மருந்தகத்திற்கு கூடுதல் வசதி அளித்தல்.

*** 20503–திரு. கோ. காளன்:**

மாண்புமிகு தொழில்லாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தொழிற்சாலைகளில் விபத்துக்களினால் காயமடைகின்ற தொழிலாளர்களுக்கு அவசர சிகிச்சை அளிக்க அம்பத்தூர் இ.எஸ்.ஐ. மருந்தகத்தில் தேவையான வசதிகள் செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன், தொழிலாளர் நலத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தொழிற்சாலைகளில் விபத்துக்களினால் காயமடைகின்ற தொழிலாளர்களுக்கு மருந்தக நேரத்தில் முதலுதவி சிகிச்சை அளிக்க அம்பத்தூர் இ.எஸ்.ஐ. மருந்தகத்தில் தேவையான வசதிகள் உள்ளன. உள்ளிருப்பு நோயாளியாக அவசர சிகிச்சை பெற வேண்டியிருந்தால்

அவர்கள் உடனே சென்னை அயனாவரத்தில் உள்ள ஈ.எஸ்.ஐ. மருத்துவமனைக்கு அனுப்பப்படுவர். அங்கு அவசர சிகிச்சைக்கான எல்லா வசதியும் செய்யப்பட்டிருக்கின்றன.

திரு. கோ. காளன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பத்தூர் தொழில் பேட்டை மட்டும் அல்லாமல், தொழில் பேட்டைகள் நிறைய இருக்கக்கூடிய பகுதிகளில் உள்ள ஈ.எஸ்.ஐ. டிஸ்பென்சரிகள் பகுதி நேரமாகத்தான் இயங்குகின்றன. ஆகவே அதை 24 மணி நேரமும் இயக்கினால், எந்த நேரத்திலே விபத்து ஏற்பட்டாலும் உடனடியாக அங்கே சிகிச்சை பெற முடியும். அதற்கு இப்போது வசதி இல்லாததனால் இங்கே விபத்துக்கள் ஏற்படுகின்ற போது வெகு தொலைவில் உள்ள அரசினர் பொது மருத்துவ மனைக்கோ அல்லது தனியார் மருத்துவ மனைக்கோ எடுத்துச் செல்ல வேண்டி இருக்கிறது. அதனால் விபத்து ஏற்பட்டிருக்கக்கூடிய தொழிலாளிக்கும் அந்த நிறுவனத்திற்கும் வீணாக பணம் செலவாகின்றது. உறுப்பினர்களாக இருக்கக் கூடிய தொழிலாளர்கள் சந்தா கட்டுகிறார்கள். எனவே தொழிற்சாலைகள் நிறைந்த பகுதியில் உள்ள ஈ.எஸ்.ஐ. டிஸ்பென்சரிகளை பகுதி நேரமாக இல்லாமல் முழு நேரமாக பணி செய்வதற்கு ஏதாவது அரசிடம் திட்டம் இருக்கிறதா? இருந்தால் அது ஆவன செய்யப்படுமா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பத்தூர் ஈ.எஸ்.ஐ. மருந்தகம் புற நோயாளிகளுக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஆனால் அயனாவரத்தில் உள்ள ஈ.எஸ்.ஐ. மருத்துவமனை ஏறத்தாழ 616 படுக்கைகள் கொண்டதாகும். அங்கே அவசர உதவிக்காக 2 ஆம்புலன்ஸ் வேன்களும் உபயோகப்படுத்தப்படுகின்றன. மேலும் அங்கே 24 மணி நேரமும் மருத்துவர்கள் இருக்கின்றார்கள். எந்த நேரத்திலேயும் தொழிலாளர்கள் அந்த மருத்துவமனைக்குச் சென்று சிகிச்சை பெறலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கோ. காளன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அயனாவரத்தில் இருப்பது வேறு. ஆவடியில் ஒரு தொழிற்சாலை இருக்கிறது என்று சொன்னால், அங்கே விபத்து ஏற்படுகின்றபோது, அயனாவரத்திற்கு கொண்டு செல்வதற்கு ஏறத்தாழ 1 மணி நேரம் ஆகிவிடும். விபத்து ஏற்பட்ட தொழிலாளிக்கு உடனடியாக 10 நிமிடத்திற்குள் சிகிச்சை அளிக்க வேண்டும். எனவே தான் இந்த தொழிற்சாலைகள் இருக்கக்கூடிய பகுதிகளிலேயே அந்த டிஸ்பென்சரிகள் இருக்கவேண்டும் என்று கேட்கிறோம். எனவே, அம்பத்தூரில் மட்டும்

1993 டிசம்பர் 31]

அல்லாமல் ஹோசூரில் உள்ள தொழிற்சாலைகளுக்கும், கிண்டி போன்ற இடங்களில் உள்ள தொழிற்சாலைகளுக்கும் அருகிலே டிஸ்பென்சரிகள் 24 மணி நேரமும் இயங்குவதற்கு வசதி செய்து தரப்படுமா என்று தான் நான் கேட்க விரும்புகிறேன். அயனாவரத்தில் இருப்பது தொழிலாளர்களுக்கு தெரியும். இருந்தாலும்கூட அங்கே போனால் பணச்செலவு. அத்துடன் அமைச்சர் அவர்கள் சொல்லும்போது அங்கே ஆம்புலன்ஸ் இருப்பதாக சொல்லியிருக்கிறார்கள். அம்பத்தூரில் இருக்கும் தொழிற்சாலையில் ஆக்சிடென்ட் என்று சொன்னால், அயனாவரத்திலிருந்து ஆம்புலன்ஸ் வந்து ஏற்றிச் செல்வதற்கு 2 மணி நேரம் ஆகிவிடும். சில நேரங்களில் ஆம்புலன்ஸ் கிடைக்காது. எனவே அந்தந்தப் பகுதியிலேயே 24 மணி நேரம் இயங்குவதற்கு வசதி செய்து தரப்படுமா என்று அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன்.

முற்பகல் 11.00

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பத்தூர் ஈ.எஸ்.ஐ. மருந்தகம் புற நோயாளிகளுக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. உள்ளபடியே தொழிலாளிகளுக்கு நீண்டகாலமாக இருக்கின்ற அயனாவரம் மருத்துவமனை ஈ.எஸ்.ஐ. மருத்துவமனை 24 மணி நேரமும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன் அனுமதியோடு பேரவையின் வினாக்கள்--விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. வினா எண். 116, திரு. எஸ். சண்முகநாதன், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

116–

ஆலங்குடி தொகுதியில் கூட்டுறவு வங்கி மூலம் வழங்கப்பட்ட விவசாயக் கடன்கள்.

*** 11160–திரு. எஸ். சண்முகநாதன்:**

மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) ஆலங்குடி தொகுதி, சூரக்காடு மற்றும் காட்டாத்தி கூட்டுறவு வங்கிகளில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தில் (ஐ.ஆர்.டி.பி.) 1990–91-ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட விவசாயக் கடன்கள் எவ்வளவு?

(ஆ) இதில் பலன் பெற்ற ஆதிதிராவிடர் எத்தனை பேர்?